# செப்டம்பர் – 12 – புதன்

## தூய கன்னி மரியாவின் திருப்பெயர்

**என் பாடல் வழிவழியாய் உம் பெயரை நிலைக்கச் செய்யும்: திபா. 45:17**

## முதல் வாசகம் : 1 கொரிந்தியர் 7 : 25 - 31

சகோதர சகோதரிகளே, மணமாகாதவர்களைக் குறித்துப் பார்ப்போம். இவர்களைப்பற்றி ஆண்டவரின் கட்டளை எதுவும் என்னிடமில்லை. எனினும், ஆண்டவரின் இரக்கத்தால் நம்பிக்கைக் குரியவனாயிருக்கும் நான் என் கருத்தைச் சொல்கிறேன். மணமாகாதோர் தாம் அழைக்கப்பட்ட நிலையிலேயே இருந்துவிடுவது நல்லது. இப்போதுள்ள இடர் நிலையை முன்னிட்டு இவ்வாறு இருப்பதே நல்லதென எண்ணுகிறேன். மனைவியுடன் திருமணத்தால் இணைக்கப்பட்டு இருப்பவர்கள் மணவிலக்குக்கு வழிதேடக் கூடாது. மனைவியுடன் இணைக்கப்படாதவர்கள் திருமணம் செய்துகொள்ள வழி தேடக்கூடாது. நீங்கள் திருமணம் செய்துகொண்டால் அது பாவமல்ல. இளம் பெண்கள் திருமணம் செய்துகொண்டால் அதுவும் பாவமல்ல. ஆனால் திருமணம் செய்து கொள்வோர் இவ்வுலக வாழ்வில் இன்னலுறுவர். நீங்கள் அவ்வின்னல்களுக்கு உள்ளாகாதிருக்க வேண்டும் என்பதே என் நோக்கம். அன்பர்களே, நான் சொல்வது இதுவே. இனியுள்ள காலம் குறுகியதே. இனி மனைவி உள்ளவரும் மனைவி இல்லாதவர் போல இருக்கட்டும். அழுபவர் அழாதவர் போலவும், மகிழ்ச்சியுறுவோர் மகிழ்ச்சியற்றவர் போலவும், பொருள்களை வாங்குவோர் அவை இல்லாதவர் போலவும் இருக்கட்டும். உலகச் செல்வத்தைப் பயன்படுத்துவோர் அவற்றில் முழுமையாக ஈடுபடாதவர் போல் இருக்கட்டும். இவ்வுலகு இப்போது இருப்பது போல் நெடு நாள் இராது.

**பதில்பாடல் :** கேளாய் மகனே கருத்தாய்க் காது கொடுத்துக் கேளளாய்

## நற்செய்தி : லூக்கா 6 : 20 - 26

அக்காலத்தில் இயேசு சீடர்மீது தம் பார்வையைப் பதித்துக் கூறியவை : ”ஏழைகளே, நீங்கள் பேறுபெற்றோர். ஏனெனில் இறையாட்சி உங்களுக்கு உரியதே. இப்பொழுது பட்டினியாய் இருப்போரே, நீங்கள் பேறு பெற்றோர். ஏனெனில் நீங்கள் நிறைவு பெறுவீர்கள். இப்பொழுது அழுதுகொண்டிருப்போரே, நீங்கள் பேறுபெற்றோர் ஏனெனில் நீங்கள் சிரித்து மகிழ்வீர்கள். மானிடமகன் பொருட்டு மக்கள் உங்களை வெறுத்து, ஒதுக்கி வைத்து, நீங்கள் பொல்லாதவர் என்று இகழ்ந்து தள்ளிவிடும்போது நீங்கள் பேறுபெற்றோர். அந்நாளில் துள்ளி மகிழ்ந்து கொண்டாடுங்கள் ஏனெனில் விண்ணுலகில் உங்களுக்குக் கிடைக்கும் கைம்மாறு மிகுதியாகும். அவர்களுடைய மூதாதையரும் இறைவாக்கினருக்கு இவ்வாறே செய்துவந்தனர். ஆனால் செல்வர்களே ஐயோ! உங்களுக்குக் கேடு! ஏனெனில் நீங்கள் எல்லாம் அனுபவித்துவிட்டீர்கள். இப்போது உண்டு கொழுந்திருப்போரே, ஐயோ! உங்களுக்குக் கேடு! ஏனெனில் பட்டினி கிடப்பீர்கள். இப்போது சிரித்து இன்புறுவோரே, ஐயோ! உங்களுக்குக் கேடு! ஏனெனில் துயருற்று அழுவீர்கள். மக்கள் எல்லாரும் உங்களைப் புகழ்ந்து பேசும்போது ஐயோ! உங்களுக்குக் கேடு! ஏனெனில் அவர்களின் மூதாதையரும் போலி இறைவாக்கினருக்கு இவ்வாறே செய்தார்கள்“ என்றார்.

**தியானம்:** இன்றைய தியான வாசகங்கள் நாங்கள் மாயை உலகிலே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் இவ்வுலகில் பல ஏமாற்றங்கள், ஏற்றத்தாழ்வுகள் யாவும் ஏற்படத்தான் செய்கின்றன. அவற்றை ஏற்று இறைவனுக்கு ஏற்ப வாழும் பொழுது அவர் முன்னிலையில் பேறுபெற்றவர்களாக வாழ்ந்து இறையாட்சிக்கு செல்ல தகுதியுள்ளவர்களாவோம். ஆனால் நாங்கள் வாழும் வாழ்க்கை முறைகளினால் இறையாட்சிக்குச் செல்ல தகுதியற்றவர்களாகி விடுகின்றோம். நாங்கள் பணத்தினால், பதவியினால் யாவற்றிற்கும் அடிமையாகி எப்பொழுதும் அபபடியே இருப்போம் என்னும் மனங் கொண்டவர்களாக மற்றவர்களை ஏழைகளாக நினைத்து யாவற்றிலிமிருந்து அடிமைப்படுத்தி விடுகின்றோம். அவ்வாறு மற்றவர்களை வெறுத்து ஒதுக்குவோரை இறைவன் வெறுக்கிறார். ஆனால் இவ்வாறு ஒதுக்கப்பட்டவர்களைத்தான் இறைவன் ஆசீர்வதித்து அவர்களை விண்ணுலகு செல்ல தகுதியுள்ளவர்கள் என்று கூறுவதை இன்றைய வாசகங்களில் தெளிவுபடுத்துகினறது. இன்று நாங்கள் எவ்வாறான வாழ்க்கை வாழ்ந்து இறையாட்சிக்கு செல்ல தகுதியுள்ளவர்களாக இருக்கிறோம் என்பதை சிந்திக்க வேண்டியவாகளாக இருக்கின்றோம். காரணம் அன்பு, பகிர்வு, என்பன மறைக்கப்பட்டு போட்டி, பொறாமை தலைதூக்கியுள்ளது. போலியான வாழ்க்கையினால் பணம், புகழினை சம்பாதித்து தகுதியற்றவர்களாகி விடுகின்றோம். எனவே எங்கள் மனங்களை மாற்றிக் கொண்டவர்களாக இரண்டு அங்கி உள்ளவர்கள் ஒரு அங்கியை பகிர்ந்து வாழும் படி இறைவார்த்தையில் கூறப்பட்டது போன்று நாங்கள் எவ்வாறான உதவிகள் மற்றவர்களுக்கு செய்ய முடியுமோ அவற்றை மற்றவர்களுக்கு செய்து பகிர்ந்து வாழும் மனதினை பெற்றிடவரம் வேண்டுவோம்.